**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை - 2024 சனவரி

## (104) வணிகச் சூழல்

பெரும்பாலும் வணிகச் சூழலின் அனைத்துப் பாடப் பரப்புகளும் குறிப்பாக மட்டம் 1 இற்கான பாடப் பரப்புகளை இவ்வினாத்தாள் உள்ளடக்கியிருந்தது. பாடப்பரப்பு தொடர்பான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதே இதன் நோக்கமாக இருந்தது. மொத்தத்தில், அதிகளவான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்த அதே வேளை ஏனையோர் நன்றாக விடையளிக்கத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு எவ்வாறு விடையளித்துள்ளனர் என அவதானிக்கும்போது, வினாக்களைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்களைத் தடுப்பதும் போதுமான புள்ளிகளைப் பெறுவதற்கு உகந்தவாறு விடையளிப்பதும் முக்கியமானது என உணரப்பட்டது.

### <u>பகுதி A</u>

**வினா இல. 01**

இந்தப் பகுதியில், வணிகச் சூழல் பற்றிய பாடத்தின் ஒட்டுமொத்த பாடப் பரப்பும் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 90% மான பரீட்சார்த்திகள் 30 புள்ளிகளுக்கும் மேல் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் **1.3, 1.8, 1.17, 1.20** ஆகிய வினாக்களுக்கு வெற்றிகரமாக விடையளித்திருக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன :

**1.3** பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு ‘பணச் சந்தை’ பற்றிச் சரியாகத் தெரிந்திருக்கவில்லை. பெரும்பாலானவர்கள் தவறான விடையையே தெரிவு செய்திருந்தனர். ஆனால் சராசரி அளவான மாணவர்கள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**1.8** அதிகளவான பரீட்சார்த்திகள் SME களின் முக்கியத்துவத்தை அடையாளங் காணவில்லை. அவர்கள் சரியான விடைக்குப் பதிலாக விடை இல. 4 இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.17** பெரும்பாலான பரீட்சார்த்திகளுக்கு காப்புறுதியின் ‘‘மிகச்சிறந்த நன்நம்பிக்கை’’ என்பது பற்றித் தெரிந்திருக்கவில்லை. எனவே அவர்கள் இரு தரப்பினரையும் பற்றி விபரிப்பதற்குப் பதிலாக காப்புறுதிதாரரை மாத்திரம் விபரித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவுக்குச் சரியாக விடையளித்திருக்கவில்லை.

**1.20** அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் தொழிற்பாடுகளை’’ அடையாளங் கண்டிருக்கவில்லை. பெரும்பாலானவர்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்திற்குப் பதிலாக பல்வேறு வகையான சந்தைகள் பற்றி விபரித்திருந்தனர். சிலர் CSE இன் தொழிற்பாடுகளாக பங்கு வழங்கல்கள் மற்றும் கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றை விபரித்திருந்தனர்.

எவ்வாறாயினும், மேற்படி வினாக்களைத் தவிர, பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த பகுதிக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

**ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## பகுதி B

இந்தப் பகுதி 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டன.

### வினா இல. 02

இவ்வினா ''பங்குடமையை'' அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**பகுதி (a)** இங்கு பங்குடமையொன்றின் பண்புகள் பரீட்சிக்கப்பட்டன. சில பரீட்சார்த்திகள் பண்புகளை, விபரிப்பின்றி வெறுமனே எழுதியிருந்தனர். எனவே, அவர்களால் இதற்கென ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விபரித்து, இந்தப் பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)** இங்கு பங்குடமையின் பிரதிகூலங்கள் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைக்குப் பதிலாக பங்குடமையொன்றின் பிரதிகூலமொன்றாக இலாபப் பகிர்வினை எழுதியிருந்தனர். அவர்கள் முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கான வாய்ப்பினை இழந்திருந்தனர்.

**பகுதி (c)** அதிகளவான பரீட்சார்த்திகள் பங்காளர் ஒருவரின் கடமைகளை அடையாளங் கண்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆனால் மிகச் சில பரீட்சார்த்திகள் பங்காளரின் கடமையாக ''மூலதனப் பங்களிப்பை'' எழுதியிருந்தனர்.

முழு வினாவையும் கருத்திற் கொள்ளும்போது பெரும்பாலான பரீட்சார்த்திகள் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

### வினா இல. 03

போக்குவரத்து பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**பகுதி (a)** ஏற்றுமதியாளர் ஒருவருக்கு சிறந்த போக்குவரத்தின் அனுகூலங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் விடயங்களை விபரிக்காது விட்டதால் சில புள்ளிகளை இழந்திருந்தனர்.

**பகுதி (b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தமது பொது அறிவைக் கொண்டு, புதிய தொழினுட்பவியலின் அனுகூலங்களை எழுதியிருந்தனர்.

**Part (c)** இந்தப் பகுதி, வெளிநாட்டு வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெளிநாட்டு வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களை அடையாளங் காணத் தவறியிருந்தனர். அவர்கள் வர்த்தகம் தொடர்பான ஆவணங்களை விபரித்திருந்தனர். உதாரணமாக, காசோலைகள், கொள்வனவு / விற்பனை விலைப்பட்டியல்கள், கடவுச்சீட்டு போன்றவை.

சரியான விடைகளாவன, செயற்றிறன் விலைப்பட்டியல், வர்த்தக விலைப்பட்டியல், மூலச் சான்றிதழ், வார்நாமம், காப்புறுதிச் சான்றிதழ், இழப்பீட்டுக் கடிதம் மற்றும் தூய்மைச் சான்றிதழ் போன்றவை.

எனவே அவர்களால் முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை என்பதுடன் பெரும்பாலானவர்கள் மிகவும் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**வினா இல. 04**

**பகுதி (a)** **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** காப்புறுதி தொடர்பாக சராசரி அளவிலான பரீட்சார்த்திகள் விடை எழுதியிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் தொழிற்சாலை ஊழியர்களுக்கான காப்புறுதிக்குப் பதிலாக, தீ அபாயக் காப்புறுதி மற்றும் திருட்டுக் காப்புறுதி ஆகியவற்றை விபரித்திருந்தனர்.

**பகுதி (b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் ‘‘காப்புறுத்தத்தக்க நாட்டம்’’ என்னும் பதத்தைச் சரியாக இனங்காணவில்லை. அவர்கள் அந்த காப்புறுத்தத்தக்க நாட்டத்தை சட்டக் கடப்பாடு ஒன்றாக மாத்திரமே விபரித்திருந்தனர். ஆனால் சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (c)** இந்தப் பகுதியில், காப்புறுதியை இடர் ஒன்றாக ஏற்றுக்கொள்வதற்கான தேர்வு நிபந்தனைகள் பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள், இடர் ஒன்றாக காப்புறுதிக்கான தேர்வுநிபந்தனையை விபரிப்பதற்குத் தவறியிருந்ததால் சரியான விடைகளை அளித்திருக்கவில்லை. சரியான விடைகளாக முன்கணிப்பு, காரணகாரிய தொடர்பின்மை மற்றும் சரிபார்ப்பு என்பன அமையும்.

எனவே, பெரும்பாலான பரீட்சார்த்திகள் மிகவும் குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**வினா இல. 05**

இங்கு, இணைய வங்கிச் சேவை தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**பகுதி (a)** இங்கு, சிறந்த பணத்தின் பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சிறந்த பணத்தின் பண்புகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக சிறந்த பணத்தின் தொழிற்பாடுகளை எழுதியிருந்தனர். இதனால், அவர்கள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசியையே பெற முடிந்தது.

**பகுதி (b)** **(i)** இந்தப் பகுதி, இலத்திரனியல் பணத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். கடன் அட்டைகள் பற்றி வினாவிலேயே குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் கடன் அட்டைகளை எழுதியிருந்தனர். E-wallet, Smart Cart Cards, Macro Chips, பற்று அட்டைகள், முற்கொடுப்பனவு அட்டைகள் என்பன இதற்கு சில உதாரணங்களாகும்.

**(ii)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இணைய வங்கிச் சேவை தொடர்பான தமது நடைமுறை அறிவைக் கொண்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இணைய வங்கி வசதியைப் பயன்படுத்தி, ஆற்றப்படக்கூடிய சேவைகள் பற்றிப் பரீட்சிக்கப் பட்டது. ஆனால், சிலர் இணைய வங்கிச் சேவையின் அனுகூலங்களை எழுதியிருந்தனர்.

**பகுதி (c)** இங்கு, காசோலை ஒன்றின் கூறுகளை எழுதுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

இது **வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் ஹவுஸ் (தனியார்) கம்பனி** தொடர்பான விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாவாகும். பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இதற்கு விடையளித்திருந்தனர். அவர்களில் பலர் சராசரிப் புள்ளிகளுக்கும் மேலே பெற்றிருந்தனர்.

**பகுதி (a)** இங்கு கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அனுகூலங்கள் பரீட்சிக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆனால் சிலர் பங்குடமையின் அனுகூலங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி (b)** இவ்வினா PESTEL பகுப்பாய்வு பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்த்திருந்தது. பரீட்சார்த்திகளில் அரைவாசிப் பேருக்கு PESTEL பகுப்பாய்வு பற்றிய விளக்கம் காணப்படவில்லை. அவர்கள் அதற்குப் பதிலாக SWOT பகுப்பாய்வை விபரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் பேரினச் சூழல் சக்தியைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும் ஒவ்வொரு சக்திக்குமான காரணிகளைக் குறிப்பிடவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு விடையளித்திருக்கவில்லை.

**பகுதி (c)** இவ்வினா நாட்டதாரர்களை நோக்கிய பொறுப்புகளைப் பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் உள்ளக மற்றும் வெளிவாரித் தரப்பினரை நாட்டதாரர்களாக எழுதியிருந்தனர்.

**பகுதி (d)** இந்தப் பகுதி, அரசாங்கம் வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் வழிமுறைகளைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வணிகங்களில் அரசாங்கம் செல்வாக்குச் செலுத்துகின்ற வழிமுறைகள் தொடர்பான தமது பொது அறிவைக் கொண்டு இவ்வினாவுக்கு இலகுவாக விடையளித்து, முழுப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (e)** “புத்தாக்கம்'' ஆனது **வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் கம்பனியின்** வெற்றிக்கு எவ்வாறு உதவும் என்பது பற்றி இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்துடன் இணைக்கப்பட வேண்டிய விடயங்களைத் தவிர்த்து ‘‘புத்தாக்கம்'' பற்றி எழுதியிருந்தனர். சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

விடையளிப்பதற்கு முன் விவரணத்தை நன்கு வாசித்து, விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

(1) பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடப்புத்தகங்களை படித்தல் வேண்டும்.

(2) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து பயிற்சி பெறுவதும் உரிய வினாத்தாள்களுடன் இணைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரலுக்கேற்ப விடையளித்து பயிற்சி பெறுவதும் மிகவும் முக்கியமானதாகும்.

(3) மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னர் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் வினாக்களையும் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(4) விடைகளை வினாத்தாளிலேயே எழுதி அதனை விடைத்தாள்களுடன் அனுப்ப வேண்டாம்.

(5) கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களை கைவிட எத்தனிக்க வேண்டாம். இது குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

(6) அறிவை நிகழ்நிலைப்படுத்துவதற்கு அண்மையில் வெளியான இதழ்கள், கையேடுகள், பத்திரிகைகள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்தவும்.

(7) புதிய வினாவுக்கு விடையளிக்க ஆரம்பிக்கும்போது ஒரு புதிய பக்கத்தைப் பயன்படுத்தவும்.

- * * * -